මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : 2026/04** **2026.03.30**

## ஈ-சேவை மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளை வழங்குதல்.

**தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நபர்களுக்காக கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரில் வருகை தராமல் தேர்தல்கள் ஈ-சேவை ஊடாகத் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான வழிமுறைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.**

https://eservices.elections.gov.lk என்ற இணைப்பின் மூலம் அல்லது வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டின் (QR Code) மூலம் அல்லது ec.lk/es மூலம் தேர்தல்கள் ஈ-சேவையினுள் இலகுவாகப் பிரவேசிக்க முடியுமென்பதோடு, இதன் மூலம் இணையவசதி கொண்ட கணினியொன்றின் மூலம் அல்லது ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியொன்றின் மூலம், நீங்கள் இருக்கின்ற இடத்திலிருந்தே நாளின் எந்தவொரு நேரத்திலும் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

**இந்த QR குறியீட்டை ஸ்கேன் (Scan) ) செய்வதன் மூலம்,**

- 2026 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரியதாக தேருநர் இடாப்பு வரைவின் தகவல்களைப் பரீட்சித்தல் மற்றும் தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது வதிவிடத்தை மாற்றம் செய்வதற்காக நிகழ்நிலையில் விண்ணப்பித்தல்;
- 18 வயது பூர்த்தியடைந்துள்ள இதுவரை தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாதுள்ள பிரசைகளுக்கு தேருநர் இடாப்பில் தங்கள் பெயரை உட்சேர்த்துக்கொள்ளல்;
- 18 வயது பூர்த்தியடையாத, இருப்பினும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டுள்ள இளம் பிரசைகளுக்கு எதிர்காலத்தில் தேருநர் இடாப்பில் பெயரைச் உட்சேர்த்துக்கொள்ளல்;
- 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையான தேருநர் இடாப்பின் பதிவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் கூடிய பதிவுத் தகவல்கள் உள்ளடங்கிய தேருநர் இடாப்பு பதிவுக் கூற்றைப் பெற்றுக்கொள்ளல்;
- மாற்றுத்திறனாளிப் பிரசைகளுக்கு வாக்களிப்பதற்குத் தேவையான விசேட தேவைப்பாடுகளைத் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கான வசதிகள்; என்பன செய்யப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஈ-சேவை இணையதளத்திற்குச் சென்று, அதில் உள்ள குடிமக்களுக்கான இணைப்பின் ஊடாக இந்த அனைத்துச் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, ஒவ்வொரு சேவையையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் அந்த ஒவ்வொரு சேவையும் உள்ளடங்கியுள்ள நுழைவாயிலில் (Portal) குறிப்பிடப்பட்டுள்ளதென்பது மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ரசிக்க பீரிஸ்
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்